# தமிழ்மொழி

## ஆண்டு 4

<u>உலகநீதிக்கேற்ப சரியான பொருளைத் தெரிவு செய்க</u>

நஞ்சுடனே யொருநாளும் பழக வேண்டாம்

நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம்

நஞ்சுடைய பாம்புடன் ஒருநாளும் விளையாடக்கூடாது

நல்லவர்களுடைய நட்பு இல்லாதவர்களுடன் பழக்கம் வைத்துக் கொள்ளக்கூடாது

**கோடிட்ட இடத்தில் ஏற்ற உலகநீதி செய்யுளையை எழுதுக.**

அம்மா : சீக்கரமாக வந்துவிட்டாயே! இன்றைக்கும் அந்த ராஜாவுடன்தான் வந்தாயா?

கமல் :இல்லையம்மா. நடந்துதான் வந்தேன். இப்போதெல்லாம் நான் ராஜாவுடன் வருவதில்லை. அவன் என்னுடன் பேசுவதை விட்டுவிட்டான்.

அம்மா : அப்படியா? நல்ல செய்தி சொன்னாய். அவனுக்கு நல்ல நண்பர்கள் நிலைப்பது கடினம் .........................................................................................என்று உலகநீதி சொல்கிறது. எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. ஏனிந்து பிரிவு? அவன் உன்னைத் தீய பழக்கத்துக்கு ஆளாக்கப் பார்த்தானா?

கமல் : இல்லையம்மா. நான்தான் அவனை நல்வழிக்குக் கொண்டுவரப் பார்த்தேன்.

அம்மா : நாய் வாலை நிமிர்த்த முடியுமா? பாம்புக்குப் பால் வார்க்கப் பார்த்திருக்கிறாய்? நல்ல வேளை அவன் உன்னைச் சீண்டவில்லை.

கமல் : ஏன் அம்மா? பாம்பைக் குட்டியிலிருந்தே பாலூட்டி வளர்த்தால் அதைப் பழக்கப்படுத்திச் செல்லப் பிராணியாக்க முடியாதா?

அம்மா : அப்படியெல்லாம் கனவு காணாதே. சும்மாவா உலகநீதி செய்யுள் ஒன்று ......................................................................................... என்று சொல்கிறது ?

கமல் : நல்ல வேளை ராஜா விஷயத்தில் நான் தப்பித்தேன். உலக நாதப் பண்டிதர் நல்லதைத்தான் சொல்லியிருக்கிறார்.

| | |
|---|---|
| நஞ்சுடனே யொருநாளும் பழக வேண்டாம் | நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம் |